# Medical Translation

English to Tamil

## Total Knee Replacement

| Total Knee Replacement | முழங்கால் முழுவதும் மாற்றுதல் : (முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை) |
| --- | --- |
| If your knee is severely damaged by arthritis, it may be hard for you to perform simple activities, such as walking or climbing stairs. You may even begin to feel pain while you are sitting or lying down.<br><br>If nonsurgical treatments like medications and using walking supports are no longer helpful, you may want to consider total knee replacement surgery. Joint replacement surgery is a safe and effective procedure to relieve pain, | <br><br><br>முழங்கால் முழுவதும் மாற்றுதல் :<br>(முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை)<br><br>உங்கள் முழங்கால், மூட்டுவாத (கீல்வாத) நோயினால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தால் எளிய நடவடிக்கைகளான சாதாரணமாக நடப்பது, படிகட்டுகளில் ஏறுவது, ஆகியவையும் கடினமாக இருக்கும். நீங்கள் அமர்ந்திருக்கும் பொழுதும், |

correct leg deformity, and help you resume normal activities.

Knee replacement surgery was first performed in 1968. Since then, improvements in surgical materials and techniques have greatly increased its effectiveness. Total knee replacements are one of the most successful procedures in all of medicine. According to the Agency for Healthcare Research and Quality, more than 600,000 knee replacements are performed each year in the United States.

Whether you have just begun exploring treatment options or have already decided to have total knee replacement surgery, this teaching will help you understand more about this valuable procedure.

**Anatomy**

The knee is the largest joint in the body and having healthy knees is required to perform the most everyday activities.

The knee is made up of the lower end of the thighbone (femur), the upper end of the shinbone (tibia), and the kneecap (patella). The ends of these three bones where they touch are

படுத்திருக்கும் பொழுதும் வலியை உணர்வீர்கள்.

மருந்துவகைகள் மற்றும் ஆதரவுகளுடன் கூடிய நடை பயிற்சி ஆகிய அறுவையற்ற சிகிச்சை முறைகள் பயனளிக்கத்தவறினால், நீங்கள் மொத்த முழங்கால் மாற்று அறுவை சிகிச்சையை (Total Knee Replacement) கருத்தில் கொள்ளவேண்டும். மூட்டு மாற்று அறுவை சிகிச்சை, வலி நிவாரணம் பெற ஒரு பாதுகாப்பான, செயல்திறன் மிக்க செயல்முறையாகும். இது கால்களின் குறைபாட்டை சரி செய்து, நீங்கள் மீண்டும் அன்றாட சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள உதவுகிறது.

முழங்கால் மாற்று அறுவை சிகிச்சை முதல் முதலில் 1968 -வது ஆண்டு நிகழ்த்தப்பட்டது. அன்று முதல், அறுவை சிகிச்சை பொருட்களிலும், கையாளப்படும் உத்திகளிலும் பெருமளவில் முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. மொத்த முழங்கால் மாற்றுமுறையானது மருத்துவ சிகிச்சை முறையிலேயே ஒரு வெற்றிகரமான செயல்முறையாகும்.

உடல்நல ஆராய்ச்சி மற்றும் தர நிர்ணயிப்பு அமைப்பின் கூற்றுப்படி அமெரிக்காவில் 6,00,000 க்கும் மேற்பட்ட முழங்கால் மாற்று அறுவை சிகிச்சைகள் ஒவ்வொரு ஆண்டும் செய்யப்படுகின்றன.

கிடைக்கும் சிகிச்சை முறை விருப்பங்களை நீங்கள் ஆராய ஆரம்பித்திருந்தாலும் அல்லது மொத்த முழங்கால் மாற்று அறுவை சிகிச்சையைப் பெற ஏற்கனவே முடிவெடுத்திருந்தாலும், இந்தப் பெருமதியான நடைமுறையைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள இப்போதனை உங்களுக்கு உதவியாக இருக்கும்.

**உடற்கூற்றியல்**

முழங்கால்தான் உடலின் கூட்டுக்களில் மிகப்பெரிய கூட்டு அல்லது இணைப்பாகும். தினசரி நடவடிக்கைகளை மேற்கொள்ள ஒரு ஆரோக்கியமான மூட்டு நமக்குத்தேவை.

| | |
|---|---|
| covered with articular cartilage, a smooth substance that protects the bones and enables them to move easily.<br><br>The menisci are located between the femur and tibia. These C-shaped wedges act as "shock absorbers" that cushion the joint. | முழங்கால், தொடை எலும்பின் (femur) கீழ் பகுதியும், கணுக்காலுக்கு மேலும் முழங்காலுக்குக் கீழும் உள்ள காலின் நீண்ட முன் எலும்பின் மேல் இறுதியும், (tibia) மற்றும் (kneecap) முழங்காலில் வட்ட வடிவில் இருக்கும் எலும்பும் சேர்த்து உண்டாக்கப்பட்டுள்ளது.<br><br>முழங்கால் மூட்டுகுருத்தெலும்பு தொடை (femur) மற்றும் கால் முன்னெலும்புக்கு (tibia) இடையே அமைந்துள்ளது. இந்த C - வடிவ தக்கைகள் மூட்டு இணைப்புக்கு மெத்தையாக அமைந்து, ஒரு அதிர்வேற்பியாக செயல்படும். |

# Thyroid Cancer

| Understanding Thyroid Cancer | தைராய்டு என்ற கேடயச் சுரப்பிப் புற்று நோயை அறிந்துகொள்ளுங்கள் |
|---|---|
| The thyroid is a butterfly shaped gland at the base of the throat, near the windpipe. It produces hormones that help control heart rate, blood pressure, body temperature and weight. There are four types of thyroid cancer – papillary, follicular, medullary and anaplastic thyroid cancer. Papillary is the most common while anaplastic is the most aggressive and difficult to cure. Other types of thyroid | <br>தைராய்டு அல்லது கேடயச் சுரப்பி என்பது நமது குரல்வளைக்கு அருகே கீழுள்ள சுரப்பியாகும். இது கழுத்தின் முன்புறமாக இரு மருங்கிலும் காணப்படுவதால் இது பட்டாம்பூச்சி (வண்ணத்துப்பூச்சி) வடிவிலுள்ள சுரப்பி எனவும் கூறப்படுகிறது. இது இருதய துடிப்பு, இரத்த அழுத்தம், உடலின் வெப்ப நிலை மற்றும் எடையை கட்டுப்படுத்தும் ஒரு வித ஹார்மோனை (இயக்கு நீர்) சுரக்கிறது.<br><br>நான்கு விதமான புற்றுநோய்களால் இந்த கேடயச் சுரப்பி தாக்கப்படுகிறது. அவை : |

cancers are usually curable if detected early.

The most common symptom of thyroid cancer is a neck lump or nodule. If the tumor is large, it may cause other symptoms which would include:

- Neck or facial pain
- Shortness of breath
- Difficulty in swallowing
- Cough unrelated to cold
- Hoarseness or voice change

Having any of these symptoms does not mean it is cancer, but if one or more of them is noticed for more than two weeks, then a doctor must be seen and an immediate health screening is a must.

Thyroid cancer is diagnosed by a physical examination of the neck for nodules, thyroid gland function test, blood calcitonin and calcium levels in some cases.

Ultrasound done by an expert sinologist is the investigation of choice. It helps to

1. பாபில்லேரி (Papillary) என சொல்லப்படும் சதைக்காம்பு போன்ற புற்றுநோய்
2. ஃபால்லிக்யூலர் (Follicular) என்ற நுண் குமிழைப் போன்ற சீதப்படலப்புண் கொண்ட புற்றுநோய்
3. மெடுல்லரி (Medullary) எனப்படும் மச்சையில் உண்டாகும் புற்றுநோய்
4. அனாபிலாஸ்டிக் (Anaplastic) எனப்படும் புற்றுநோய்

மேற்கண்ட புற்றுநோய்களில் பாபில்லேரி (Papillary) எனும் புற்றுநோய் பொதுவாக உண்டாவதுடன், எளிதில் குணமாகக்கூடியது. ஆனால், அனாபிலாஸ்டிக் (Anaplastic) மிகவும் கொடூரமானதும், குணப்படுத்த கடினமாதும் கூட. மற்ற விதமான தைராய்டு நோய்கள் விரைவில் கண்டுபிடிக்கப்பட்டால் அநேகமாக எளிதில் குணப்படுத்த இயலும்.

கேடயச் சுரப்பிப் புற்றுநோயின் மிகப் பொதுவான அறிகுறி என்னவென்றால், கழுத்து ஒரு தசைப்பிண்டம் போன்ற அல்லது முடிச்சு போன்ற தோற்றத்துடன் காணப்படும். அந்த தசைப்பிண்டம் அல்லது கட்டி பெரியதாக காணப்பட்டால், அது கீழ்கண்ட மற்ற விளைவுகளையும் ஏற்படுத்தும் :




- கழுத்து அல்லது முகத்தில் வலி
- ஆழமாக மூச்சு வாங்க இயலாமை
- எதையும் விழுங்க கடினமாக இருக்கும்
- கரகரப்பான குரல் அல்லது குரலில் மாற்றம்

மேற்கண்ட அறிகுறிகளில் ஏதாவது ஒன்று இருந்தால், அது புற்றுநோயின் அறிகுறியாகாது. ஆனால், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அறிகுறிகள் தொடர்ந்து இரு வாரங்கள்

| | |
|---|---|
| characterize the nodule (benign or malignant). It can also be used to target a biopsy (FNAC). Ultrasound is used in the follow-up of benign nodules as well. It helps to confirm the diagnosis and plan the treatment.<br><br>Molecular testing (gene expression classification) can also be performed to confirm the diagnosis before surgery. Different types of imaging techniques like X-ray, CT scan, MRI and PET scan can also be performed for accurate diagnosis.<br><br>The thyroid tumor is staged in order to develop the most effective treatment plan. The two types of surgeries which can be performed are Hemi thyroidectomy and Total thyroidectomy.<br><br>Survey may be followed by systemic radioactive iodine therapy to destroy cancerous thyroid tissue which is not surgically removed. External radiation or external-beam therapy can also be used. Chemo-therapy plays a very | நீடித்திருந்தால் உடனே ஒரு மருத்துவரை அணுகி ஆரோக்கிய சோதனை செய்துகொள்வது அவசியம்.<br><br>கழுத்தில் முடிச்சுகள் உண்டாகியிருந்தால், கேடயச் சுரப்பிகளின் செயல்பாடு, இரத்த கால்சிடோனின் மற்றும் கால்சியம் நிலை ஆகிய பரிசோதனைகளால் கேடயச் சுரப்பி புற்றுநோய் என்னும் தைராய்டு புற்றுநோய் கண்டறியப்படுகிறது.<br><br>ஒரு தேர்ந்த சோனாலஜிஸ்டிடம் செய்துகொள்ளும் அல்ட்ராசௌன்ட் (ultrasound) சிகிச்சைமுறை ஒருவரின் விருப்பத்தைப் பொருத்தது. அதனால் கழுத்தில் உணடாகியிருக்கும் முடிச்சுகள் தீங்கற்றவையா அல்லது தீங்கிழைப்பவையா என பாகுபடுத்த இயலும். இது திசு ஆய்வை (biosy) மேற்கொள்ளவும் உதவும். (Fine Needle Aspiration Cytology) Biopsy எனப்படும் சிகிச்சையானது, ஒரு ஊசியை கட்டியில் செலுத்தி அது சந்தேகிக்கும் இடத்தை அடைந்ததும், ஒரு சைரிஞ் (syringe) மூலம் சிறு தசையை உறிஞ்சி எடுத்து அதை அடுத்த ஆய்வுக்காக லேபரேடரிக்கு அனுப்புவதுதான். அல்ட்ராசௌன்ட் முறை தீங்கற்ற முடிச்சுகளை தொடர்ந்து கவனிக்க உதவும். ஊசி செலுத்தப்படுவதை அல்ட்ராசௌன்ட் மானிடரில் கண்டு பாதிக்கப்பட்ட இடத்திற்கு ஊசியை செலுத்த இயலும். இதனால் வியாதியை சரியாக கண்டறிந்து சிகிச்சையை திட்டமிடுவது சாத்தியமாகிறது.<br><br>அறுவை சிகிச்சைக்கு முன் சிகிச்சைமுறையை உறுதிப்படுத்த மோலாகியுலர் டெஸ்டிங் (molecular testing) என சொல்லப்படும் மூலக்கூறு சோதனை மரபணு வெளிப்பாட்டை வகைப்படுத்துதல் (Gene expression classification) ஜீன் எக்ஸ்ப்ரெஷன் கிலாஸ்ஸிஃபிகேஷன் கூட செய்யலாம். துல்லியமான சிகிச்சைமுறையை கண்டறிய பலவிதமான இமேஜிங் நுட்பங்களான எக்ஸ்-ரே, CT ஸ்கேன், MRI மற்றும் PT ஸ்கேன் கூட செய்யலாம். மிகவும் பயனுள்ள சிகிச்சையை திட்டமிட தைராய்டு கட்டி சில நிலைகளில் குறிக்கப்படுகிறது. ஹெமி தைராய்டெக்டமி (Hemi thyroidectomy) மற்றும் டோடல் தைராய்டெக்டமி (total thyroidectomy) என்ற இரண்டு விதமான அறுவை சிகிச்சைகளை செய்யலாம். |

| | |
|---|---|
| little role in thyroid cancer except for very aggressive cancers such as anaplastic thyroid cancer.<br><br>An integrated approach with a multidisciplinary team of Onco Surgeons, Radiation Oncologists & Medical Oncologists exponentially increases the chances of a positive outcome. | அறுவை சிகிச்சையை தொடர்ந்து முறையான கதிரியக்க அயோடின் சிகிச்சையை (systemic radioactive iodine therapy) மேற்கொள்வதினால், அறுவை சிகிச்சையினால் அகற்றப்படாத புற்றுநோய் தைராய்டு தசைகளை அழிக்கலாம். வெளிப்புற கதிர்வீச்சு (external radiation) அல்லது புறக்கதிர் (external-beam) சிகிச்சையையும் செய்யலாம். அனாபிலாஸ்டிக் தைராய்டு புற்றுநோயைப் போன்ற கடுமையான புற்றுநோய்களைத்தவிற இரசாயன சிகிச்சை முறை மற்ற தைராய்டு புற்றுநோய்களுக்கு கையாளப்படுவதில்லை.<br><br>ஆன்கோ சர்ஜியன்ஸ், ரேடியேஷன் ஆன்காலஜிஸ்ட்ஸ், மற்றும் மெடிகல் ஆன்காலஜிஸ்ட்ஸ் (Onco Surgeons, Radiation Ocologists & Medical Oncologists) போன்ற புற்றுநோயியலைச் சார்ந்த பல அறுவை சிகிச்சை வல்லுனர்களின் ஒருங்கிணைந்த குழு ஒரு சிறந்த விளைவை கொடுக்கும் வாய்ப்பை பல மடங்கு அதிகரித்துவிடும். |

All Rights Reserved ©

---

Email : Translation@Shaadmaani.Net

http://Translation.Shaadmaani.Net